# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1977/16 - 2016 ජූලි මස 27 වැනි බදාදා - 2016.07.27

*1977/16 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 13/2014*

**(107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டம்**

*(107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 7 ஆம் பிரிவின் கீழ் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வஜிர அபேவர்தன,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2016, யூலை 13.

ஒழுங்குவிதிகள்

1. (இதனகத்துப் பின்னர் "கட்டளைச் சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான (107 ஆம் அத்தியாயமான) நொத்தாரிசுமார் கட்டளைச் சட்டத்திற்கான முதலாவது அட்டவணையானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் பாகம் "அ" இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகம் "அ" இனை இடுவதன் மூலமும்:-

"

அ

(பிரிவு 7)

ஏழாம் பிரிவின் கீழ் பொருந்திப் பயிலுநராகச் சேர்த்துக்கொள்வதற்கான ஒழுங்குவிதிகள்.

1. (1) பிரசித்த நொத்தாரிசு ஒருவரின் அலுவலகத்திற்கு தம்மை தகைமையுடையவராக்கும் நோக்குடன் பொருந்திப் பயிலுநராக இருப்பதற்கு உத்தேசிக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் போட்டிப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தேசித்துள்ள ஆள் ஒவ்வொருவரும், (3) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கல்விசார் தகைமைகளையும் வேறு தகைமைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*(3) (அ) கல்விசார் தகமைகள் :-*

*பரீட்சார்த்தி -*

(i) *கல்விப் பொதுத்தராதர (சாதாரண) தர பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் ஆகிய பாடங்கள் உட்பட, அப்பாடங்களில் ஏதேனும் மூன்றுக்கு திறமைச் சித்தியுடன் சேர்த்து குறைந்த பட்சம் ஆறு பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ; அத்துடன்*

(ii) *கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் (பொதுப் பரீட்சை நீங்கலாக) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

(ஆ) வேறு தகமைகள் :-

*பரீட்சார்த்தி-*

(i) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) *முடிவுத் திகதியில் 20 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;*

(iii) *நற்பண்புகள் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;*

(iv) தொழில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான உடல் மற்றும் உள ஆளுமையை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) *ஏதேனும் சட்ட நீதிமன்றம் ஒன்றினால் ஏதேனும் குற்றவியல் தவறொன்றிற்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது.*

*2. பந்தி 1 (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகமைகளைக் கொண்டவரும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உத்தேசித்துள்ளவருமான ஆள் ஒவ்வொருவரும், பொருளளவில் இக்கட்டளைச் சட்டத்திற்கான இரண்டாவது அட்டவணையில் உள்ளபடிவம் "அ 1" இல் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*3. விண்ணப்பம் ஒவ்வொன்றும் பரீட்சார்த்தி எந்த மொழியில் தொழில்புரிவதற்கு உத்தேசித்துள்ளாரோ அந்த மொழியில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவருடைய சொந்தக் கையெழுத்தில் இருத்தலும் வேண்டும்.*

*4. (1) போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுதல் வேண்டும்.*

*(2) பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கட்டளைச் சட்டத்திற்கான இரண்டாவது அட்டவணையின் "அ" என்னும் படிவத்துடன் சேர்த்து, பரீட்சார்த்தியின் மொழி மூலத்தினை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மட்டத்தின் சிறப்பு நிலைச் சித்தி ஒழுங்கிற்கு இணங்க ஒழுங்குபடுத்தி, அத்தகைய பரீட்சைப் பெறுபேற்று அறிக்கையை பதிவாளர் நாயகத்திக்கு அனுப்புதல் வேண்டும்.*

*5. பதிவாளர் நாயகம், எவ்வமைச்சருக்கு உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டிருக்கின்றதோ, அவ்வமைச்சருக்கு அவ் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*6. (1) அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன் மேல், அமைச்சர் கடைசியாக எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத்தை அடிப்படையாகக் கொண்டு, அதில் நிரற்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கிடையேயிருந்து ஒவ்வொரு மாவட்டத்துக்கும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய பொருந்திப் பயிலுநர் எண்ணிக்கையைத் தீர்மானித்தல் வேண்டும்.*

*(2) நேர்முக பரீட்சையானது அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் திறமையைப் பரீட்சிப்பதற்கு பதிவாளர் தலைமையதிபதியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.*

*(3) பதிவாளர் நாயகம், போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளையும் நேர்முகப் பரீட்சையையும் அடிப்படையாகக் கொண்டு பொருந்தி பயிலுநராக இருப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையைத் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவருக்கு பொருந்திப் பயிலுநர் ஒருவராக சேவையாற்றுவதற்கு ஒருவரிடம் பரீட்சார்த்திக்கும் உரிமம் ஒன்றை வழங்குதலும் வேண்டும்.*

*7. எப் பரீட்சார்த்திக்கு உரிமம் ஒன்று வழங்கப்பட்டிருந்ததோ, அப்பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் அத்தகைய உரிமம் வழங்கிய திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் -*

*(அ) அந்த உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரை உடைய சட்டத்தரணியுடன் பொருந்திப் பயில்வதற்கான உடன்படிக்கையைச் செய்துகொள்ளல் வேண்டும் ; அத்துடன்*

*(ஆ) பதிவாளர் நாயகத்திற்கு அத்தகைய உடன்படிக்கையின் பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*8. ஆளெவரும், அவர் பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்றிருந்தாலன்றி, பொருந்திப் பயிலுநராக இருத்தல் ஆகாது.*

*9. ஒவ்வொரு பொருந்திப் பயிலுநரும் இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதி ஒன்றிற்கு அவரது விதிகளுக்கு இணங்கச் சேவையாற்றுதல் வேண்டுமென்பதுடன், அக்காலப்பகுதியின் போது நொத்தாரிசுச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட வேலையினை ஆய்வு செய்வதைத் தவிர வேறு ஏதேனும் தொழிலில் அமர்த்தப்படுதலோ அல்லது ஈடுபடுத்தப்படுதலோ ஆகாது.*

*10. எச் சட்டத்தரணியின் கீழ் பொருந்திப் பயிலுநர் சேவையாற்றுகின்றாரோ அச்சட்டத்தரணி, எந்த மொழியில், பயிலுநர் தொழில் புரிவதற்கு உத்தேசித்துள்ளாரோ அந்த மொழியில் நொத்தாரிசுத் தொழிலைப் புரியாத ஒருவராக இருப்பின், அவர் அத்தகைய சட்டத்தரணியின் பயிலுநர் ஒருவராக ஒரு வருடத்திற்கும் அத்துடன் அவர் எந்த மொழியில் தொழில் புரிவதற்கு உத்தேசித்துள்ளாரோ அந்த மொழியில் நொத்தாரிசு தொழிலைப் புரியும் அலுவலகத்தில் பயிலுநர் ஒருவராக அதனைத் தொடர்ந்துவரும் ஒரு வருடத்திற்கும் சேவையாற்றுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய விடயத்தில் பதிவாளர் தலைமையதிபதியிடமிருந்து உரிமம் ஒன்றைப் பெற்று அத்தை உரிமத்தில் பெயரிடப்பட்ட நொத்தாரிசுடன் புதிய பொருந்திப் பயிலுநர் உடன்படிக்கையை செய்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய புதிய பொருந்திய பயிலுநர் உடன்படிக்கையின் பிரதி ஒன்று பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்படுதலும் வேண்டும்.*

*11. எவரேனும் ஆளொருவரும் எந்தச் சட்டத்தரணிக்கு பயிலுநராக உள்ளாரோ அந்தச் சட்டத்தரணி அத்தகைய பொருந்திப் பயிலுதல் ஏற்படுத்தப்பட்டுள்ள போது இறக்கும் பட்சத்தில் அல்லது எந்த வலயத்தில் தொழில்புரிகின்றாரோ அந்த வலயத்தில் தொழில் புரிவதை இடைநிறுத்தும் பட்சத்தில் அல்லது வேறு ஏதேனும் நல்ல போதுமான காரணத்திற்காக, பதிவாளர் தலைமையதிபதி வேறு சட்டத்தரணிக்கு அவரது பயில்நிலையை மாற்றுவதற்கு அத்தகைய பொருந்திப் பயிலுநரை அனுமதிக்கலாம். அவ்விடயத்தில், அத்தகைய மாற்றுகை எவ்வாறாயிருப்பினும் அவர் தனது மூலப் பயில் நிலையின் கீழ், அவர் தொழில் புரிந்திருக்கவேண்டிய பயிற்சிக் காலப்பகுதியின் பாகமொன்றாக அது கணிக்கப்படுதல் வேண்டும்.*

*12. ஒன்பதாம் மற்றும் 10 ஆம் ஒழுங்குவிதிகளின் கீழான சேவையின் எண்பிப்பாக ஒவ்வொரு ஆண்டிலும் மாச்சு மாதம் 31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னர், அத்துடன் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவர் எந்த சட்டத்தரணி அல்லது நொத்தாரிசின் கீழ்ச் சேவையாற்றுகின்றாரோ, அந்தச் சட்டத்தரணி அல்லது நொத்தாரிசிடமிருந்து பெற்ற, இக்கட்டளைச் சட்டத்திற்கான இரண்டாவது அட்டவணையின் ஆ என்னும் படிவத்திலான சான்றிதழ் ஒன்றைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும்.*

*13. பன்னிரெண்டாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழைக் கொடுத்துதவுவதற்குத் தவறுகின்ற எவரேனும் பொருந்திப் பயிலுநரை, அவர் பதிவாளர் தலைமையதிபதியின் திருப்திக்கென அத்தகைய தவறுகைக்கான காரணங்களை விளக்கிக்கூறியிருந்தாலன்றி, அவருடைய பயிலுநர் பகுதியின் பாகமாக அவ்வாறு தவறியுள்ள காலப்பகுதியினைக் கணக்கெடுப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.” அத்துடன்*

*(அ) அதன் பாகம் ஆ இன் 2 ஆம் ஒழுங்குவிதியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய 2 ஆம் ஒழுங்குவிதியினை இடுவதன் மூலமும் :-*

*“2 ஒராம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பத்தைச் செய்வதற்கு உத்தேசித்துள்ள ஒவ்வொரு பொருந்திப் பயிலுநரும், அவருடைய உத்தேசித்த விண்ணப்பம் பற்றிய அறிவித்தலை மும்மொழிகளிலும் அவர் எந்த நீதித்துறை வலயத்தில் வசிக்கின்றாரோ, அந்த நீதித்துறை அமைந்துள்ள மேல் நீதிமன்றத்தின் துலாம்பரமான பாகத்தில் ஒட்டுவதனையும், மும்மொழிகளிலும் ஒரு தடவையாவது அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதனையும். அத்துடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்படும் உள்ளூர் புதினப் பத்திரிகைகளில் வெளியிடுவதனையும் செய்வித்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தலானது பதிவாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பம் செய்யப்படும் திகதிக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.”.*

2. காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான கட்டளைச் சட்டத்திற்கான இரண்டாவது அட்டவணையானது அதன் அ 1 என்னும் படிவத்தினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய படிவம் அ 1 இனை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது:-

(முதலாவது அட்டவணை - ஒழுங்குவிதி 2)

**"படிவம் அ 1**

**பொருந்திப் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம்**

திகதி :............................................

பதிவாளர் நாயகம்,

அன்புள்ள ஐயா,

1. நொத்தாரிசு பதவிக்கு என்னைத் தகமைப்படுத்தும் நோக்குடன் பொருந்திப் பயிலுநராவதற்கும் உத்தேசித்துள்ள நான், பொருந்திப் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கென .................................. திகதியன்று நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைக்கு அனுமதி பெறுவதற்காக இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

2. முழுப்பெயர் :.......................................................

3. தனிப்பட்ட முகவரி :.............................................

4. மாவட்டம் :.............................................................

5. பிரதேச செயலாளர் பிரிவு :...............................

6. எனக்கு, பரீட்சை தொடங்கும் திகதியன்று 20 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருக்கின்றது. எனது பிறப்புச் சான்றிதழ் (அல்லது வேறு வயதினை உறுதிப்படுத்தும் பாகமான.................) "(அ)" என அடையாளமிடப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

7. உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியான திரு. ................................... என்பவரின் கீழ் பொருந்திப் பயிலுநராக சேவையாற்றுவதற்கு நான் உத்தேசித்துள்ளேன்.

8. நான் தொழில் புரிவதற்கு உத்தேசித்துள்ள வலயம் மற்றும் மொழி என்பன முறையே.................... (வலயம்) மற்றும்................. (மொழி) ஆகும்.

9. பொருந்தினைப் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறு நான் வேண்டுகின்றேன்.

.............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.".

8- 232

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.